**அசல் வழக்கு எண்:31/2016 நாள்: 25.04.2024**

வா.சா.1 காசிலிங்கம்

**<u>2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

1. சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. நான் இந்த வழக்கில் 1ம் வாதி. 4ம் பிரதிவாதி இராமநாதன் என்பவரை எனக்கு நன்றாக தெரியும். 4ம் பிரதிவாதி கிராமத்தில் உள்ள நிலத்திற்கு தனது பெயரில் பட்டா வேண்டும் என்று சொல்லி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்துள்ளதால் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்தேன். தாவா சொத்து சம்மந்தமாக 4ம் பிரதிவாதி பெயரில் எந்த ஆவணமும் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக 2, 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதியின் மீது அசல் வழக்கு எண்.160/2014 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

2. அசல் வழக்கு எண்.160/2014ல் என்னையும் தரப்பினராக சேர்க்க சொல்லி என்னுடன் 5 நபர்களையும் சேர்த்து மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் பேரில் நீதிமன்றம் அனுமதித்தது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி இராமநாதன் மற்றும் 9 நபர்கள் மீது நான் சிவகங்கை நிலஅபகரிப்பு தடுப்புப்பிரிவில் நான் புகார் கொடுத்தேன் என்றும் அதன் பேரில் விசாரணை நடைபெற்றது என்றால் விசாரிக்கவில்லை. 4ம் பிரதிவாதி இராமநாதன் நான் தாவா சொத்தை இனிமேல் தொடமாட்டேன் என்று சொன்னதால் மேற்படி புகார் மனுவை கைவிட்டு விட்டோம். மேற்படி புகார் மனு தாவா சொத்து சம்மந்தமாக தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் இராமநாதனுக்கு எந்த அனுபவமும் இல்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. 2 முதல் 6 வாதிகள் கிராமத்தில் எந்த பொறுப்பிலும் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் மட்டும் தான் பொறுப்பில் உள்ளார்கள் என்பதற்கு ஊரில் நோட்டு எழுதி வைத்துள்ளோம். அவர்கள் ஊர் கிராமத்தார்கள் மூலம் கூட்டம் நடத்தி அதில் யார் யார் பொறுப்பில் இருக்க வேண்டும் என எழுதிக்கொண்டோம். மேற்படி நோட்டை வழக்கில் தாக்கல செய்யவில்லை. ஆனால் தாக்கல் செய்ய கேட்டால் தயாராக உள்ளேன். நான் சொன்னது போல் 2 முதல் 6 வாதிகள் கிராமத்தார்கள் மூலம் பொறுப்பாளராக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. நான் வழக்குரையில் 2 முதல் 6 வாதிகள் பொறுப்பாளர்களாக கிராமத்தார்கள் மூலம் தேர்ந்தெடுக்கபட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தேவகோட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் 4ம் பிரதிவாதி இராமநாதன் தாக்கல் செய்த மனு தள்ளுபடியானதாக கேள்விப்பட்டேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2ஐ தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் 2, 3 பிரதிவாதிகள் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தை அபகரித்து எழுதிக் கொண்ட ஆவணங்கள். வா.சா.ஆ,2ஆனது கிராமத்தில் உள்ள 5 நபர்களின் பெயரில் 3 ஜாதியை சேர்ந்தவர்கள் இணைந்து வாங்கியது. மேற்படி 5 நபர்களும் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி 5 நபர்களின் குடும்பத்தைச் சேர்ந்த யாரையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் ஊருக்காக வாங்கப்பட்ட சொத்து என்பதால் சேர்க்கவில்லை. மேற்படி 5 நபர்களின் வாரிசுகள் உயிருடன் உள்ளார்கள்.

5. வா.சா.ஆ.2ன் அசல் 4ம் பிரதிவாதயிடம் உள்ளது என்றால் எழுதி வாங்கிய நபர்கள் 4ம் பிரதிவாதியிடம் கொடுத்ததாக சொன்னார்கள். ஆனால் நேரடியாக மேற்படி சம்பவம் தெரியாது. 4ம் பிரதிவாதியிடம் எதற்காக வா.சா.ஆ2ஐ கேட்கவில்லை என்றால் 4ம் பிரதிவாதி பட்டா கேட்கும் போது எங்களிடம் கொடுக்க மாட்டார். தாவா சொத்தின் சர்வே எண்.5/2. மேற்படி சர்வே எண்ணின் நகலை பார்த்து சர்வே எண்ணை தெரிந்து கொண்டேன். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது தாவா சொத்து 5/2 மட்டும் தான் இருந்தது. 2 ஏக்கர் 75செண்ட் விஸ்தீரணம். 2014ம் ஆண்டிற்கு முன்பே இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சர்வே எண்.5/2ஐ 5/2ஏ மற்றும் 5/2பிஆக உட்பிரிவு செய்யப்பட்டு பொது நலனுக்காக குலக்காலுக்காக இடம் ஒதுக்கப்பட்டு சர்வே எண்.5/2பி 3ம் பிரதிவாதி பால்கரசு பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் பொய்யாக பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

**S/d.R.M. மாரிமுத்து,பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)
தேவகோட்டை.